1978 செப்டம்பர் 14]

Fair Price shops opened by Central Government

*Q. No. 220 Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether a number of Fair Price shops are being set up by the Union Ministry of Civil Supplies in this State from June 1978 and

(b) Whether the State Government has been consulted by the Central Government in the matter?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ) & (ஆ) மத்திய அரசு இதற்கான ஒரு திட்டம் வகுப்பது பற்றி ஆலோசித்து வருகிறது. மாநில அரசு தன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. மைய அரசு இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது மாநில அரசு கூட அண்மையில் 16,000 நியாய விலைக் கடைகளை அமைப்போம் என்று சொல்லி, சிலபல இடங்களில் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. இந்த நேரத்தில் மைய அரசு இத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்தால் நமது அரசு அதை வரவேற்று விரைந்து செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? அதில் மாநில அரசுக்கு ஏதேனும் பங்கு உண்டா ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசாலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற இந்த நியாய விலைக் கடைகளில் மாநில அரசுக்கு எந்தவிதமான பங்கும் நிச்சயமாக இல்லை. இப்பேர்ப்பட்ட கடைகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனையை மைய அரசு மாநில அரசுடன் கேட்ட நேரத்தில் தமிழக அரசு அதை நிறைவேற்ற தன்னுடைய கருத்துக்களை ஏற்கெனவே எடுத்துச் சொல்லி இருக்கின்றது. இது இன்னும் மைய அரசினுடைய பரிசீலனையில் தான் இருக்கிறது. இன்னும் அதனுடைய முடிவினைத் தெரிவிக்கவில்லை. அவர்கள் அவ்வாறு முடிவினைத் தெரிவித்த பிறகு தமிழக அரசு அதன் மேல் நடவடிக்கைக் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.